தலைப்பு – 202 முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 202 - முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த

நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன்

காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) கட்டுநிதி மீதி

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(i)	கட்டுநிதி இணக்கக்கூற்றில் ஏனைய தலைப்புக்களுக்காக அறிக்கையிடப்படுகின்ற நிறுவனத்தால் செய்யப்பட்ட செலவினம் ரூபா 2,353,661 ஆக இருந்த போதிலும் ரூபா 1,879,401 ஆக ரூபா 474,260 குறைத்தும், ஏனைய தலைப்புக்களினால் முற்பணம் பீ கணக்கில் மேற்கொள்ளப்பட்ட செலவு வைத்தல்கள் ரூபா 1,152,115 ஆக இருந்த போதிலும் ரூபா 1,626,375 ஆக ரூபா 474,260 அதிகரித்து குறிப்பிடப்பட்டிருந்தது.	விடயங்களை இனங்காணும் போது தவறொன்று ஏற்பட்டிருந்ததாகவும் அதனை சரிசெய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ii)	ஏனைய தலைப்புக்களினால் முற்பணம் பீ கணக்கில் மேற்கொள்ளப்பட்ட வரவு வைத்தல்கள் ரூபா 285,215 ஆக இருந்த போதிலும் ரூபா 500,215 ஆக ரூபா 215,000	விடயங்களை இனங்காணும் போது தவறொன்று ஏற்பட்டிருந்ததாகவும் அதனை சரிசெய்வதற்குரிய	அரச கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டியின் பிரகாரம்

அதிகரித்தும், ஏனைய தலைப்புக்களுக்காக அறிக்கையிடப்படு கின்ற நிறுவனத்தால் முற்பணம் பீ கணக்கிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு வைத்தல்கள் ரூபா 215,000 ஆக இருந்த போதிலும் இவ்வாறான பொறுப்புக்கள் இன்றியதாக ரூபா 215,000 குறைத்து கட்டுநிதி இணக்கக்கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது.	நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

(ஆ) ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச்செல்லப்படாமை

திணைக்களத்தால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளாதுவரையாகவும் பேணிச் செல்லப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(i) பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு		
நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.	முறையான வகையில் நாளதுவரையாக பேணிச்செல்லு மாறு விடய உத்தியோகத்தருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டிருந்தது.	பொறுப்புக்கள் தினந் தோறும் பரீட்சிக்க முடியுமான வகையில் பொறுப்பு பதிவேடில் அந்தப் பொறுப்புக்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.
(ii) வாகன நிரல்படுத்தல் பதிவேடு		
நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகனங்கள் நிரற்படுத்தல் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை.	வாகனங்கள் நிரற்படுத்தல் பதிவேட்டை பேணிச்செல்லுமாறு விடய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	வாகன நிரற்படுத்தல் பதிவேடு ஒன்று பேணிப்செல்லப்படல் வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	09 மீண்டெழும் செலவின விடயத்திற்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டுமொத்தமாக ரூபா 20,750,000 ஆன தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 9,578,821 சேமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் வீதமாக 29 சதவீதம் முதல் 84 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.	2024 ஆம் ஆண்டின் திசம்பர் மாதத்திற்குரிய உள்நாட்டு பிரயாணச் செலவினம் 2025 ஆம் ஆண்டில் செலுத்தியமை, திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் அநேகமானவை காலம் தாழ்த்தவேண்டி ஏற்பட்டமை, திணைக்கள கட்டிம் பழுதுபார்ப்பதற்குரிய மதிப்பீடு மற்றும் நிதி ஏற்பாடுகள் வரையறுக்கப்பட்ட விலைகளில் காணப்படாமை மற்றும் உரிய எதிர்கால நடவடிக்கைகளை எடுப்பதற்கு காலம் போதியளவில் காணப்படாமை, பாதுகாப்பு சேவை செலவினங்களில் 50 சதவீதம் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தில் மீளளிப்புச் செய்தல் மற்றும் கடன் பெற்ற உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றமையின் அடிப்படையில் ஆண்டிற்கான நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கும் போது இயலுமான வரை சரியாகவும் முழுமையாகவும் தயாரித்தல் வேண்டும்.
(ஆ)	03 செலவின விடயங்களுக்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டுமொத்தமாக ரூபா 2,300,000 ஆன தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 1,227,696 சேமிக்கப்பட்டி ருந்ததுடன் அந்த சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் வீதமாக 33 சதவீதம் முதல் 79 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.	பொறிகள், இயந்திர உபகரணங் கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் வாகனங்களின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி செய்தல் தேவை ஏற்படாமை மற்றும் பதவியணியினர் பயிற்சி தடவைகளுக்கு உரிய கொடுப்பனவுகள் சனவரி மாதத்திலும் தீர்த்துவைக்கப்பட்ட மையால் நிதிஏற்பாடு சேமிப்பொன்று காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கும் போது இயலுமான வரை சரியாகவும் முழுமையாகவும் தயாரித்தல் வேண்டும்.
(இ)	மீண்டெழும் செலவின விடயத்திற்காக ரூபா 2,000,000 மற்றும் மூலதன செலவின விடயத்திற்காக நிதி ஏற்பாடு செய்யப் பட்ட ரூப 600,000 ஆன ஒட்டுமொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.	ஹஜ் புனித யாத்திரை கடமைகளுக்காக திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உத்தியோகத்தர்களுக்காக வெளிநாட்டு பிரயாணச் செலவினங்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டதுடன் அரசாங்கத்திற்கு செலவினப் பொறுப்பாக இல்லாத வகையில் உரிய வெளிநாட்டு பிரயாணச் செலவினங்கள் ஹஜ் நிதியத்தில் இருந்து செலுத்துதல், திணைக்கள கட்டிடத்தை அபிவிருத்தி செய்வதற்குரிய மதிப்பீடு மற்றும் நிதி ஏற்பாட்டு எல்லையில் கூறுவிலைகள் காணப்படாமை	இயலுமானவரை சரியாகவும் முழுமையாகவும் மதிப்பீடு தயாரித்தல் வேண்டும்.

		மற்றும் உரிய மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு காலம் போதியளவில் காணப்படாமையினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	
(ஈ)	இரண்டு மீண்டெழும் செலவின விடயத்திற்காக ஆரம்ப மதிப்பீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாதிருக்கும் போது குறைநிரப்பு மற்றும் நிதிப் பிரமாணம் 66/69 இன் மூலம் ஆண்டில் ரூபா 55,919,536 மாற்றப்பட் டிருந்ததுடன் ஆண்டின் இறுதியின் போது ஒட்டு மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.	2025 ஆம் ஆண்டிற்காக பேரிச்சம்பழம் 2024 திசம்பர் மாத இறுதி அரைப் பகுதியில் சுங்கத்திற்கு கிடைத்திருந்தமை மற்றும் அதனை விடுவிப்பதற்குரிய நிதி ஏற்பாடும் போதியளவில் காணப்படாமையின் காரணமாக குறைநிரப்பு மற்றும் நிதிப்பிரமாணம் 66/69 இன் மூலம் நிதி ஏற்பாடு மாற்றப்பட்ட போதும் விடுவிடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியீனமாக இருந்தமையாலும், உரிய கொடுப்பனவுகள் 2025 ஆம் ஆண்டில் மேற்கொள் வதற்கும் ITMIS முறைமைக்குரிய நிதி ஏற்பாடுகள் தொடர்பான தகவல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டியிருந்தமை யாலும் 2024 ஆம் ஆண்டில் கிடைத்த மேற்கூறப்பட்ட ஒட்டுமொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.	உரிய ஆய்வினை மேற்கொண்டு அத்தியவசிய பணிகளுக்காக மாத்திரம் நிதிப் பிரமாணம் 66/69 இன் பிரகாரம் நிதி ஏற்பாடுகள் மாற்றப்படல் வேண்டும்.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	நிதிப்பிரமாணம் 94(2) மற்றும் (3) இன் பிரகாரம் பெறுமதி ரூபா 1,149,441 ஆன கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்க ளுக்கு உட்பட்ட பொறுப்புக் கள் கூற்றில் (இணைப்பு iv) இன் கீழ் உள்ளடக்க வேண்டியிருந்த போதிலும் கடப்பாடுகள் தொடர்பான தகவல்கள் உரிய கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.	உரிய பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு பொறுப்புக்கள் கூற்றில் (இணைப்பு iv) இன் கீழ் உள்ளடக்க படாதிருந்த தவறாக இருந்ததை சரிசெய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	உரிய வழிகாட்டியின் பிரகாரம் ஏற்படுத்தப்படுகின்ற பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	நிதிப்பிரமாணம் 94(1) மற்றும் 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய இலக்கம் 255/2017 என்ற அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் (இ) பிரிவின் பிரகாரம் டிசம்பர் 31 இல் உள்ளவாறு சேமிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை விஞ்சி கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஏற்படுத்த முடியாதிருந்த போதிலும் செலவின விடய இலக்கம்	உரிய சேமிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டுப் பெறுமதி ரூபா 205,318 ஆனமையால் கடப்பாடாக ITMIS மற்றும் சிகாஸ் இணைய உட்படுத்துதல் இரண்டு ஊடாகவும் கடப்பாடுகளாக கவனத்திற்கொள்ளப்பட்ட ரூபா 74,172.65 பெறுமதியுடைய சனவரி மாதத்தில் கிடைத்த திசம்பர்	பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

202-2-1-0-1403 (மின்சாரம் மற்றும் நீர்) இற்காக சேமிக்கப்பட்ட நிதி ஏற்பாட்டுப் பெறுமதியான ரூபா 205,318 இனை விஞ்சி ரூபா 254,792 கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.	மாத்திற்குரிய நீர் பட்டியல் மாத்திரமாக இருந்ததை தயவுடன் அறியத்தருவதுடன் பொறுப்புக்கள் பதிவேட்டில் உறுதிச்சீட்டு இலக்கம் 2501-14 இன் கீழ் ரூபா 385,937.64 பெறுமதியுடைய மின்சாரப் பட்டியல் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதை அறியத்தருகின்றோம். இந்த தவறை சரிசெய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.	

3.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லப்படுகின்றதை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் வினைத்திறன் தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமானதாக கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டுமாயின் அந்த மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்கு	சில காலமாக திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வாளர், கணக்காளர், உதவிப் பணிப்பாளர் போன்ற 06 பதவிகளிலும் வெற்றிடங்கள் காணப்பட்டமையால் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிப்பதற்கு முடியாதிருந்தது. தற்போது இந்த பதவிகளில் சில நிரப்பப்பட்டு முறையான நிதி மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்குக் காலம் தேவையான உரிய மீளாய்வினை மேற்கொள்வதற்கும் இது தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	சமர்ப்பிக்கப்படவில்லை.	அறிவிக்கப்பட்டுள்ளது.	
(ஆ)	கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான பிரகாரம் குறித்துரைத்த கால எல்லையில் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்க வேண்டியமை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராலும் கணக்கீட்டு உத்தியோகத்தராலும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 4.5 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.	உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்படுகின்றமையால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான பிரகாரம் குறித்துரைத்த கால எல்லையில் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிப்பதற்கு முடியாதிருந்தது. எனினும் தற்போது அமைச்சின் உள்ளக கணக்காய்வளரி னதும் உதவியுடன் உள்ளக கணக்காய்வு பணிகளை முறைமைப்படுத்துவதற்கான திட்டமொன்று தயாரிப்பதற்கும் உரிய பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கும் அதன் பிரகாரம் சகல கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் குறித்துரைத்த கால எல்லையில் பதிலளிப்பதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	உள்ளக கணக்காய்வு நோக்கங்களை உரிய பிரகாரம் அமுல்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான திட்டம் முறைமை யொன்று உள்ளமைக்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அறிக்கையின் 5.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் பிரகாரம் அந்த தேவை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	உள்ளகக் கணக்காய்வாளர் பதவி அங்கீகரிக்கப்பட்ட திகதியில் இருந்து வெற்றிடமாகக் காணப்படுகின்றமையால் உள்ளக கணக்காய்வு இலக்குகளை உரிய பிரகாரம் அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

	அவதானிப்புக்கள்		கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்		
(i)	இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக் கோவையின்			
	• XII அத்தியாயத்தின் 22.3 ஆம் உப பிரிவு	சும்பளமற்ற விடுமுறை காலத்திற்கிடையே வருகின்ற சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசாங்கத்தின் விடுமுறை தினங்களில் விடுமுறை சம்பளம் அற்றதாக விடுமுறை கவனத்திற் கொள்ள வேண்டியிருந்த போதிலும் 14 உத்தியோகத்தர்களின் சம்பளமற்ற விடுமுறை கணிப்பிடும் போது அந்த நாட்கள் கவனத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	கடந்த காலங்களில் சம்பளமற்ற விடுமுறைக் காலத்திற்கு இடையே வருகின்ற சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் அரசாங்க விடுமுறை தினங்களில் சம்பளமற்ற விடுமுறை நாட்களாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் விடுமுறை விடயப் பொறுப்பு உத்தியோகத்தர் விடயத்திற்கு பயிலுநராக இருந்தமையால் தவறுதலாக சில மாதங்களுக்காக இந்தக் கைவிடல்கள் ஏற்பட்டிருந்ததுடன் இந்தத் தவறை சரி செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ii)	2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையில் வெளியிடப்பட்ட நிதிப் பிரமாணம்			
	• 756(6)	முன்னைய ஆண்டின் பொருள் மெய்மையாய்வு சபை அறிக்கையின்	2023 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மை ஆய்வு சபை அறிக்கை 2025	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம்

	பிரதியொன்று அடுத்துவரும் நிதியாண்டின் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு சபை அறிக்கை 13 மாதங்கள் தாமதத்துடன் 2025 ஏப்ரல் 29 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	ஏப்ரல் 29 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக் கப்பட்டதுடன் பிரதி அமைச்சு செயலாளர், பணிப்பாளர் நாயகம் - அரச நிதித் திணைக்களம், உள்ளக கணக்காய்வாளருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	குறித்துரைத்த கால எல்லையில் பொருள் மெய்மை ஆய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
• 770(4) ஆம் பந்தி	2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பொருள் மெய்மையாய்வின் மூலம் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்களாக பொது 47 படிவத்தின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 155 விடயங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ அல்லது பொருத்தமான பிரகாரமோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பொருள் மெய்மை ஆய்வில் இனங்காணப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்களின் பெறுமதிகளுக்காக மதிப்பீட்டுக் குழுவொன்று 2023.07.20 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மிகுதி நடவடிக்கைகள் எதிர்காலத்தில் அமுல்படுத்துவதற்கு தீர்மாமனிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
• 876(3)	திணைக்களத்தால் பேணிச் செல்லப்படுகின்ற ஹஜ் நிதியம் பாராளுமன்ற சட்டத்தின் மூலம் சட்ட ரீதியாக ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தை பேணிச் செல்லும் தேவையினைக் கவனத்திற்கொண்டு சட்ட ரீதியான தன்மையினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	திணைக்களத்தினால் பேணிச்செல்லப்படுகின்ற ஹஜ் நிதியம் திணைக்கள சட்டமொன்றின் மூலம் சட்ட ரீதியாக ஸ்தாபிப்பதற்குரிய ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது முடிவடைந்துள்ளதுடன் இது தொடர்பாக இறுதி அறிக்கை ஹஜ் குழுவின் தலைவரால் யூன் மாதத்தில் கௌரவ அமைச்சருக்கு கையளிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(iii)	2018 சனவரி 24 ஆந் திகதிய அரச நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இலக்கம் 02/2018 என்ற பொதுத் துறையில் மனித வளத்தை அபிவிருத்தி செய்யும் சுற்றறிக்கை.	திணைக்களத்திற்காக மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக திணைக்களத்திற்குரிய மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.	மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தின் மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(iv)	2017 யூன் 28 ஆந் திகதிய நிதி மற்றும் வெகுசன ஊடகத் துறை அமைச்சின் இலக்கம் 01/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை	நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் விற்றுத் தீர்க்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் உரிய காலாண்டின் இறுதியின் போது கொம்ரோலர் ஜனரால் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் விற்றுத் தீர்க்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் கொம்ரோலர் ஜனரால் அலுவலகத்திற்கு விரைவாக சமர்ப்பிக்குமாறு உத்தியோகத்தருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	உரிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் கட்டிடப் பழுது பார்த்தலுக்காக ரூபா 1,000,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய பழுதுபார்த்தல்களை மேற்கொள்வற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை.	நிதி ஏற்பாட்டு எல்லையில் கூறுவிலைகள் பெறப்படாமை மற்றும் உரிய மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கான காலம் போதியளவில் இல்லாமையினால் திட்டமிடப்பட்ட கட்டிடப் பழுதுபார்த்தல் 2025 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட் டுள்ளது.	திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற் பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(ஆ)	முஸ்லிம்களின் கலை மற்றும் கலாசார நடவடிக்கைகளை வலுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் திணைக்களத்தன் நோக்கமாக இனங்காணப்பட்டிருந்ததுடன் அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற் காக அமுல்படுத்த வேண்டிய பணி களாக முஸ்லிம்களின் கலை மற்றும் கலாசாரத்தைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக செயற்திட்டங்களை இனங்கண்டு அமுல்படுத்துதல் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய செயற்திட்டங்கள் என்ன என்பது தொடர்பாக இனங்கண்டு மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கி அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கருத்துத் தெரிவிக்கப்படவில்லை.	இனங்காணப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	முஸ்லிம் மகளிர் மற்றும் இளைஞர்களை வலுவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துதல் திணைக்களத்தின் நோக்கமாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக அமுல்படுத்த வேண்டிய பணிகளை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	கருத்துத் தெரிவிக்கப்படவில்லை.	இனங்காணப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் 47(4) உப பிரிவின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 180 நாட்கள் அல்லது அதற்கு முன்னர் வெளியிடுதல் வேண்டும். 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 2/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதி திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்ட படிவத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்க வேண்டியிருந்தது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் இந்த செயலாற்றல் அறிக்கை வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
(அ)	வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 180 நாட்கள் அல்லது அதற்கு முன்னர் வெளியிட வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கை 2025 சனவரி 10 ஆந் திகதி 06 மாத தாமதத்துடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் அது தொடர்பாக அதிக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் 47(4) உப பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ) செயலாற்றல் அறிக்கை வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தால் மீளாய்வாண்டிற்குரிய வரைவு செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வில்லை.	மீளாய்வாண்டிற்குரிய வரைவு செயலாற்றல் அறிக்கை விரைவாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக் கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 14 இன் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரித்து நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
புகையிரத திணைக்களத்திற்குரிய 80 பேர்ச் அளவான காணி திணைக்களம் நடாத்திச் செல்லப்படுகின்ற கட்டிடம் அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையல் 2017 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் காணியின் சட்டரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	காணியின் சட்டரீதியான உரித்தை கையேற்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	காணியின் சட்ட ரீதியான உரித்தை கையேற்பதற்குரிய நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுதல் வேண்டும்.

4.4 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்காமை

திணைக்களத்திற்கு விநியோகிக்கப்பட்ட பின்வரும் விபரங்கள் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களுக்காக 2025 ஆகஸ்ட் 13 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

கணக்காய்வு ஐயவினாக்கள் தொடர்பான விபரம்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) வாகன பயன்பாடுகள் தொடர்பான பரீட்சிப்பு – 2024 CAA/C/DMR/2024/AQ/01-2024.11.26) (ஆ) கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் பரீட்சித்தல் - 2024 (CAA/C/DMR/2024/AQ/02-2024.12.16) (இ) நிதி மற்றும் செயலாற்றல் கணக்காய்வு – 2024 (CAA/C/DMR/2024/AQ/05-2025.05.02)	2024.05.09 ஆந் திகதிய கணக்காய்வு ஐய வினாவிற்காக 2024 மே 29 ஆந் திகதி பதிலளிக்கப்பட்டதாகவும், 2024 திசம்பர் 16 ஆந் திகதிய கணக்காய்வு ஐயவினாவிற்காக விரைவாக பதிலளிக்குமாறும் உத்தியோகத்தருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	உரிய கால எல்லையில் கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5. நல்லாளுகை

5.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் இலக்கம் 38(i)(ஊ) பிரிவின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு இலக்குகள் உரிய பிரகாரம் அமுல்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான திட்ட முறைமையொன்று உள்ளமைக்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் வேண்டும். மேலும் நிதிப் பிரமாணம் 133 இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிதிப் பிரமாணம் 128 இல் காண்பிக்கப்பட்டுள்ள தனது கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக தமது திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு அலகு ஸ்தாபிக்கப்படல் வேண்டும். எனினும் திணைக்களத்திற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட உள்ளகக் கணக்காய்வாளர் பதவி அறிக்கைத் திகதி வரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டது.	திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடம் காணப்படுகின்றமையால் உள்ளகக் கணக்காய்வுப் பணிகளை உரிய பிரகாரம் அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்த போதும் தற்போது அமைச்சின் உள்ளகக் கணக்காய் வாளரினது உதவியுடன் உள்ளகக் கணக்காய்வு இலக்குகளை முறைமைப்படுத் துவதற்கான திட்டம் முறைமையொன்று தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5.2 கணகாய்வு மற்றும் முகாமைத்துவ குழு

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் இலக்கம் 41 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனத்திற்காகவும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது திணைக்களத்தால் முறையான பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.	உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடம் காணப்படுகின்ற போதும் தற்போது அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளரின் உதவியுடன் உள்ளகக் கணக்காய்வு இலக்குகளை முறைப்படுத்துவ தற்கான திட்டமொன்று தயாரிப்பதற்கும் உரிய பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத் துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

6. மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்	பரிந்துரை
மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 123 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான பதவியணியினர் 107 ஆக இருந்த துடன் அதில் 26 அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மிகையும், 42 ஏனைய உத்தியோகத்தர்களின் வெற்றிடமும் காணப்பட்டது.	2021 இல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமிக்கும் போது வெற்றிடங்கள் கவனத்திற் கொள்ளப்படாமல் நியமிக்கப்பட்டமையால் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மிகையொன்று காணப்பட்டது. திணக்களத்தில் காணப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புமாறு பல தடவை அமைச்சின் செயலாளர் ஊடாக அரச நிருவாக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதில் சில வெற்றிடங்கள் தற்போது நிரப்ப முடியாதிருந்ததாக அரச நிருவாக அமைச்சு தெரிவித்திருந்தாக அறிவிக்கப்பட்டுள்ளது.	மிகைப் பதவியணியினருக்காக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது தேவையான பிரகாரம் பதவியணியினைத் திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.